**விவசாயிகளுக்கு கரும்பு வெட்டும் இயந்திரம்**

First Published : 15 Sep 2011 10:18:20 AM IST

புதுச்சேரி, செப். 14: விவசாயிகளின் நலன் கருதி கரும்பு வெட்டும் இயந்திரம் வாங்கிக் கொடுக்கப்படும் என்று முதல்வர் என். ரங்கசாமி கூறினார்.

சட்டப்பேரவையில் இது குறித்து டி.பி.ஆர். செல்வம் (என்.ஆர். காங்கிரஸ்) புதன்கிழமை கேள்வி எழுப்பினார்.

இதற்கு முதல்வர் ரங்கசாமி அளித்த பதில்:

விவசாயிகளின் நலன் கருதி தலா ரூ.1.5 கோடி செலவில் 3 கரும்பு வெட்டும் நவீன இயந்திரங்கள் வாங்கப்படும். இதில் 2 இயந்திரங்கள் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகத்திலும் ஓர் இயந்திரம் வேளாண்துறை நிர்வாகத்திலும் இருக்கும். இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

அப்போது தேனீ ஜெயக்குமார் (காங்கிரஸ்) குறுக்கிட்டு, இதை இலவசமாக கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வழங்கக் கூடாது. பாதி தொகையை அந்த ஆலை நிர்வாகம் செலுத்துமாறு சொல்ல வேண்டும். அப்போதுதான் அந்த இயந்திரத்தை முறையாகப் பராமரிப்புச் செய்வார்கள் என்றார்.

அப்போது க. லட்சுமிநாராயணன் (காங்கிரஸ்) குறுக்கிட்டு, கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு உள்படாத பகுதிகளில் பயிர் செய்யும் விவசாயிகளுக்கும் கரும்பு வெட்டும் இயந்திரம் கிடைக்குமா என்று கேட்டார்.

அதற்குப் பதில் அளித்த முதல்வர் ரங்கசாமி, ஓர் இயந்திரம் வேளாண்துறை வசம் இருக்கும். அதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

**நீர்மட்டம்....**

First Published : 15 Sep 2011 09:49:26 AM IST

பாபநாசம் 42.00 அடி 143.00 அடி

சேர்வலாறு 60.04 அடி 156.00 அடி

மணிமுத்தாறு 48.44 அடி 118.00 அடி

கடனாநதி 63.40அடி 85.00 அடி

ராமநதி 47.00 அடி 84.00 அடி
வடக்கு பச்சையாறு 2.00 அடி 50.00 அடி
கொடுமுடியாறு 20.00 அடி 52.50 அடி
அடவிநயினார் 101.75 அடி 132.00 அடி
கருப்பாநதி 42.71அடி 72.00 அடி
பேச்சிப்பாறை 27.40 அடி 48.00 அடி
பெருஞ்சாணி 49.50 அடி 77.00 அடி
சிற்றாறு 1 4.49 அடி 18.00 அடி
சிற்றாறு 2 4.59 அடி 18.00 அடி
முக்கடல் -16.25 அடி 25.00 அடி
பொய்கை 00.00 அடி 42.45 அடி

**நெல் கொள்முதல் நிலையம் அமைக்க கோரி தர்னா**

First Published : 15 Sep 2011 09:22:48 AM IST

நாகர்கோவில், செப்.14: கன்னியா குமரி மாவட்டத்தில் அரசு கொள்முதல் நிலையம் மூலம் நெல் கொள்முதல் செய்ய அரசை வலியுறுத்தி நாகர்கோவிலில் புதன்கிழமை தர்னா நடைபெற்றது.

நாகர்கோவிலில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற இந்த தர்னாவுக்கு போராட்டக் குழுத் தலைவர் பி. செண்பகசேகரபிள்ளை தலைமை வகித்தார். போராட்டத்தில் பங்கேற்று இயற்கை பாதுகாப்பு அறக்கட்டளை தலைவர் ஆர்.எஸ். லால்மோகன் பேசினார்.

இந்த போராட்டத்தில் நெல் விவசாயிகள் தன்னார்வ குழுத் தலைவர் எஸ். முத்தையா, பூமிபாதுகாப்பு சங்க கூட்டமைப்பு தலைவர் கே. பத்மதாஸ், நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் ஏ. சண்முகம்பிள்ளை, வெள்ளமடம் என்.பி. கால்வாய் தலைவர் தாணுபிள்ளை, உழவர் பெருமன்றத் தலைவர் எஸ். மீனாட்சிசுந்தரம், செயலர் பி. ஹென்றி, பொருளாளர் எஸ். தங்கப்பன், கிரியேட் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன், நீர்வள ஆதார அமைப்பின் தலைவர் ஏ. வின்ஸ் ஆன்றோ, ஏ. செல்லத்துரை,

எம். நாராயணதாஸ், டி. அப்பாவு, ஜெ. சுப்பிரமணியபிள்ளை, பொன்னி கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 16 Sep 2011 04:20:48 AM IST

சென்னை, செப்.15: தமிழகத்தில் வெள்ளிக்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம், புதுவையில் வெள்ளிக்கிழமை மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக்கூடும். சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை மற்றும் இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. சென்னையில் பகல் நேர வெப்பநிலை 35 டிகிரி செல்சியசாக இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது

தினமலர்

உண்மையின் உரைகல்

**நடப்பு கரீப் பருவத்தில் நெல் உற்பத்தி 8.70 கோடி டன்னாக உயரும்**

செப்டம்பர் 16,2011,03:30



புதுடில்லி : நடப்பு 2011-12ம் ஆண்டு கரீப் பருவத்தில், நெல் உற்பத்தி, 8.70 கோடி டன்னாக உயரும் என்று வேளாண் அமைச்சகத்தின், முன்கூட்டிய மதிப்பீட்டின் முதல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, 2010-11ம் ஆண்டு கரீப் பருவத்தில் 8.06 கோடி டன்னாக இருந்தது. டில்லியில் தொடங்கியுள்ள ரபி பயிர் மாநாட்டில் பங்கேற்ற மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார், நடப்பு கரீப் பருவத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டார். அதில், நடப்பு நிதியாண்டில், நாட்டின் மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி, 36 லட்சத்து 80 ஆயிரம் டன் அதிகரித்து 12.38 கோடி டன்னாக உயரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற நிதியாண்டிற்கான நான்காவது முன்கூட்டிய மதிப்பீட்டில், மொத்த உணவு தானியங்கள் உற்பத்தி 12.02 கோடி டன்னாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது என, அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, பருப்பு வகைகள் உற்பத்தி சிறப்பாக உள்ளது. எனினும், பருப்பு இறக்குமதி செலவு குறிப்பிடத்தக்க அளவிற்கு குறையவில்லை.

கடந்த கோடை காலத்துடன் ஒப்பிடும் போது, இவ்வாண்டு கோடை காலத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 71 லட்சத்து 21ஆயிரம் டன் என்ற அளவில் இருந்து, 64 லட்சத்து 30ஆயிரம் டன்னாக குறைந்துள்ளது. கரீப் பருவத்தில் ஜூன் -ஜூலை மாதங்களில் விதைப்பு பணிகள் நடைபெற்று, செப்டம்பர்-அக்டோபர் மாதங்களில் நெல் அறுவடை நடைபெறும். கடந்த ஆண்டு, கரீப் மற்றும் ரபி பருவங்களில் மொத்தம் 9 கோடியே 53 லட்சம் டன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது.

நடப்பு 2011-12ம் ஆண்டு பயிர் பருவத்தில் (ஜூலை - ஜூன்), 10 கோடியே 20 லட்சம் டன் நெல் உற்பத்தி மேற்கொள்ள மத்திய வேளாண் அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. இந்த 8 சதவீத உயர்வு, கூடுதல் ஏற்றுமதிக்கு வழி வகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கரீப் பருவத்தில் பருப்பு வகைகளின் உற்பத்தி 64 லட்சத்து 30 ஆயிரம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதே காலத்தில், சோயாபீன் உற்பத்தி 1 கோடியே 25 லட்சம் டன்னாக உயரும் என, கணிக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக உணவு தானியங்கள் உற்பத்தி 15-20 சதவீதம் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் ஒட்டுமொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி, நடப்பு கோடை காலத்தில் 2 கோடியே 9 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இது, சென்ற ஆண்டு கோடை காலத்தில் 2 கோடியே 8 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. வரும் 2011-12ம் ஆண்டு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), நாட்டின் சர்க்கரை உற்பத்தி, சென்ற ஆண்டை விட சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நடப்பு சர்க்கரை பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி 2 கோடியே 60 லட்சம் டன் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.


இதுவரை, பொது உரிம அடிப்படையில் 15 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. நடப்பு 2011-12ம் ஆண்டு கரீப் பருவத்தில், நாட்டின் கரும்பு உற்பத்தி 34 கோடியே 22 லட்சம் டன்னாக இருக்கும் என்று முதலாம் முன்கூட்டிய மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, சென்ற 2010-11ம் ஆண்டு கரீப் பருவத்தில் 33 கோடியே 91 லட்சம்

டன்னாக இருந்தது. நாட்டின் பல்வேறு மாநிலங்கள், ரபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை30-70 சதவீதம் உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன. டில்லியில் இன்று நடைபெறும் இறுதி நாள் மாநாட்டில், இந்த விலை உயர்வு குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**உணவுப் பொருள் பணவீக்கம் 9.47 சதவீதமாக குறைந்தது**

செப்டம்பர் 16,2011,03:28

---




புதுடில்லி : நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், செப்டம்பர் 3ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 9.47 சதவீதமாக சற்று குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 9.55 சதவீதம் என்ற அளவில், உயர்ந்து இருந்தது. ஆக, உணவுப் பொருள் பணவீக்கம், 0.8 சதவீதம் குறைந்துள்ளது. கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள் மற்றும் கோதுமை விலை குறைந்திருந்தது. கடந்த 2010ம் ஆண்டு, இதே வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம், 15.16 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்து இருந்தது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், வெங்காயத்தின் விலை ஆண்டு கணக்கில், 43 சதவீதம் அதிகரித்திருந்தது. இதேபோன்று, உருளைக் கிழங்கு (21 சதவீதம்), பழங்கள் (22.64 சதவீதம்), காய்கறிகள் (17.47 சதவீதம்), பால் (10.02 சதவீதம்), இதர தானியங்கள் (5.02 சதவீதம்) போன்றவற்றின் விலையும் அதிகரித்திருந்தது.

ஆண்டுக் கணக்கில் ஒப்பிடும் போது, பல உணவு பொருள்களின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது என்றாலும், வாரந்திர அடிப்படையில், குறிப்பிட்ட சில உணவுப் பொருள்களின்

விலை சற்று குறைந்திருந்தது. மொத்த உணவுப் பொருள் பணவீக்கத்தில், அத்தியாவசியப் பொருள்களின் விலை, செப்டம்பர் 3ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 13.04 சதவீத அளவிற்கு இருந்தது.

இது, இதற்கும் முந்தைய வாரத்தில், 13.34 சதவீதமாக இருந்தது. மொத்த விலை குறியீட்டு எண் கணக்கிடுவதில், அத்தியாவசியப் பொருள்களின் பங்களிப்பு, 20 சதவீதம் என்றளவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நாட்டின் பொது பணவீக்கம் அதிகரித்து வருகிறது. குறிப்பாக, சென்ற ஆகஸ்ட் மாதத்தில், பொது பணவீக்கம், 9.78 சதவீதமாக மிகவும் அதிகரித்துள்ளது. பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, கடந்த 18 மாதங்களில், வங்கிகளுக்கான வட்டி விகிதங்களை, 11 முறை உயர்த்தியுள்ளது.

இந்நிலையில், ரிசர்வ் வங்கியின், ஆய்வு கூட்டம், இன்று நடைபெறுகிறது. இதில், வங்கிகளுக்கான வட்டி விகிதம், மீண்டும் உயர்த்தப்படலாம் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். இருப்பினும், சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சுணக்க நிலையால், பொருளாதார வளர்ச்சியை கணக்கில் கொண்டு, ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை உயர்த்த வாய்ப்பில்லை என்றும் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

**நெல் கொள்முதல் செய்ய கோரிக்கை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2011,00:00 IST

கிருஷ்ணகிரி: காவேரிப்பட்டணம் அரசு நெல் கொள்முதல் மையத்தில், தொடர்ந்து, நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என்று, தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். தமிழக விவசாயிகள் சங்க மாநில பொது செயலாளர் ராமகவுண்டர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் நேரடி நெல் கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்ததை அடுத்த, இங்கு நெல் கொள்முதல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில், இதுவரை, 25 ஆயிரம் மூட்டை நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகளிடம் இருந்து, 20 சதவீதம் நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது . பல விவசாயிகளிடம் நெல் இருப்பு உள்ளது. வரும் 30ம் தேதி வரை மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படும் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். எனவே, மாவட்ட நிர்வாகம் நெல் கொள்முதல் தேதியை நீட்டிக்க வேண்டும். மேலும், மாவட்ட நிர்வாகமும் அரசும் கால்வேஅள்ளி மற்றும்

கிருஷ்ணகிரியில் நெல் கொள்முதல் நிலையங்கள் தொடங்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**பருத்தி விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 16,2011,01:28 IST

அவிநாசி:அவிநாசியில் நடந்த ஏலத்தில் பருத்தி ரகங்களின் விலை அதிகரித்திருந்தது.அவிநாசி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த இவ்வார பருத்தி ஏலத்துக்கு, 1,300 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை விட, 1,800 மூட்டை குறைவு. வரத்து குறைவாக இருப்பினும் கூட, அனைத்து ரகங்களுக்கு கடந்த வாரத்தை விட, குவிண்டாலுக்கு ரூ.100 முதல் 400 வரை விலை அதிகரித்தது.

இந்த வாரம் புதிய வரத்தாக சுரபி வந்திருந்தது.பருத்தி ஏலத்தில் (குவிண்டாலுக்கு) விலை விவரம்:எல்.ஆர்.ஏ., ரூ.3,900 முதல் 4,400 வரை, ஆர்.சி.எச்., ரூ.4,300 முதல் 4,600 வரை, சுரபி ரூ.4,400 முதல் 4,720 வரை, டி.சி.எச்., ரூ.4,500 முதல் 4,705 வரை மற்றும் மட்டம் ரூ.1,900 முதல் 2,200 வரை.சங்க தனி அலுவலர் பழனிசாமி கூறுகையில், ""ஏலத்துக்கு பருத்தி வரத்து குறைந்துள்ள நிலையிலும், அனைத்து ரகங்களுக்கும் நல்ல விலை கிடைத்தது. தற்போது சீசன் குறைந்துள்ளதால், வரத்து குறைவாக இருந்தது. அடுத்த மாத இறுதியில் மீண்டும் அதிகரிக்கும். இந்த வாரம், ரூ.18.30 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது,'' என்றார்.

**நெல் சாகுபடி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2011,21:19 IST

காரியாபட்டி : காரியாபட்டி அருகே முடுக்கன்குளம், அல்லிக்குளம், மேலகாஞ்சிரங்குளம், பாப்பணம் கிராமங்களில் திருந்திய நெல் சாகுபடி குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. விவசாய உதவி இயக்குனர் பாண்டித்துரை, விவசாய அலுவலர் செல்வராஜ், துணை அலுவலர் பாலசுப்பிரமணியன், உதவி அலுவலர்கள் ராஜகோபால், ஜெயபால், ரகுராமன், முத்தையா, சாந்தி, மீனா கலந்து கொண்டனர்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்

**கடந்த 6 வாரங்களாக உணவு பணவீக்கம் 9% மேல் நீடிக்கிறது**

பதிவு செய்த நாள் : 9/16/2011 0:44:1



புதுடெல்லி : உணவு பணவீக்கம் கடந்த 6 வாரங்களாக தொடர்ந்து 9 சதவீதத்துக்கு மேல் நீடிக்கிறது. கடந்த 3ம் தேதியுடன் முடிந்த வாரத்தில் இது 9.47 சதவீதமாக குறைந்தது. முந்தைய வாரத்தில் இது 9.55 சதவீதமாக இருந்தது. கடந்த ஜூலை மாதத்தில் 9.44 சதவீதமாக இருந்த முதன்மை பணவீக்கம் ஆகஸ்ட் மாதத்தில் 9.78 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 13 மாதங்களில் அதிகபட்ச அளவாகும். அதாவது கடந்த ஜூலை 2010ல் 9.98 சதவீதமாக இருந்தது.

இந்நிலையில், நிதிக்கொள்கை மீதான இடைக்கால காலாண்டு ஆய்வறிக்கையை ரிசர்வ் வங்கி இன்று வெளியிடுகிறது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த கடன் வட்டியை மேலும் 0.25 சதவீதம் உயர்த்தும் என இத்துறை சார்ந்த நிபுணர்கள் கூறியுள்ளனர். ஒரு தனியார் நிறுவனம் நடத்திய ஆய்வில் பங்கேற்ற 13 பொருளாதார நிபுணர்களில் 12 பேர், ரிசர்வ் வங்கி இன்று கடன் வட்டியை 0.25 சதவீதம் உயர்த்தும் என தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நிதிநெருக்கடியிலிருந்து இந்திய பொருளாதாரம் வளர்ச்சிப் பாதைக்கு திரும்பிய நிலையில், பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்காக இதுவரை 11 முறை கடன் வட்டியை ரிசர்வ் வங்கி உயர்த்தி உள்ளது. 12வது முறையாக இன்று உயர்த்த திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனால் நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.